GWOP : 246/2023

நாள் : 26.09.2024

ம.சா. : 1

பெயர் : பாண்டியராஜன்

1 மற்றும் 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தற்போது கள்ளக்குறிச்சியில் இருக்கிறேன். கடந்த 11 மாதங்களாக கள்ளக்குறியில்தான் வசிக்கிறேன். இதற்கு முன்பு நான் நியூசிலாந்து நாட்டில் இருந்தேன். நான் நியூசிலாந்து நாட்டில் Permanant Resident. நான் நியூசிலாந்து நாட்டில் 2016 வது வருடம் முதல்இருந்து வருகிறேன். நான் hotel management முடித்திருக்கிறேன் அதன் பிறகு லண்டனில் MBA படித்தேன். 2009 முதல் 2015 வரை லண்டனில் இருந்தேன். நான் Green card holder ஆ என்றால் அங்கு அப்படி சொல்லமாட்டார்கள். Permanant Resident என்று தான் சொல்வார்கள். நான் நியூசிலாந்து நாட்டில் Permanant Resident என்பதால் அந்த நாட்டிற்கு விசா இல்லாமல் எப்போது வேண்டுமானாலும் போகலாம் வரலாம் என்றால்சரி. கடந்த ஒரு வருடமாகத்தான் அப்படி போகலாம் வரலாம். நான் பார்த்து வந்த வேலையின் தற்போதைய நிலைமை என்ன என்றால் நான் அடிக்கடி லீவ் போட்டு விட்டு இந்தியா வந்ததால் ஏற்கனவே Redges என்ற ேஹாட்டல் மேனேஜ்மென்ட் வேலை பார்க்க முடியாததால் வெயிட்டராக இருக்கிறேன். சாட்சி மீண்டும் அந்த வேலையை ரிசைன் செய்து விட்டதாக கூறுகிறார். மீண்டும் நியூசிலாந்து சென்று வேலைபார்க்கும் ஐடியா உள்ளதா ஆமாம். 29.05.2019 அன்று எனக்கும் இலக்கியாவிற்கும் திருமணம் முடிந்தது. இலக்கியாவையும் அவரது குடும்பத்தையும் எப்படி தெரயும் என்றால் புரோக்கர் மூலமாக தெரியும். Arrenged Marriage தான். நான் 2019 ல் திருமணம் முடிந்து 2 மாதத்தில் மீண்டும் நியூசிலாந்து போய்விட்டேன் என்றால் சரி. எனது பிரமாண வாக்குமூலத்தில் 3 மாதங்கள் தான் சுமூகமாக வாழ்ந்ததாக சொல்லயுள்ளேன் என்றால் சரி. எனக்கும் இலக்கியாவிற்கும் சிறு சிறு சண்டைகள் வரும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. என்ன காரணத்தினால்என்றால் திருமணம் செய்யும்போதே அவர் என்னுடன் நியூசிலாந்து வரவேண்டும் என்று சொல்லிதான் திருமணம்செய்தோம். ஆனால் அவர் வர மறுத்ததால் குழந்தை பிறப்பதற்கு முன்பு எங்களுக்குள் பிரச்சனை வந்தது. திருமணம் முடிந்து நான் நியூசிலாந்து சென்றபிறகு இலக்கியா தன்னுடைய அம்மா வீட்டிற்கும் என்னுடைய வீட்டிற்கும் வந்து போய்கொண்டிருந்தார் என்றால் இல்லை. நான் போனபிறகு தனது அம்மா வீட்டிற்கு போய் விட்டார். அவர் மாதமாக இருந்ததால் தனது அம்மா வீட்டிற்கு போக வேண்டும் என்று சொன்னதால் அனுப்பி வைத்தேன். 2019 ம் வருடம் ஜீலை மாதம் நியூசிலாந்து போன நான் மார்ச் 2022 ல் தான் இந்தியா வந்தேன் என்றால் சரியல்ல. என்

மனைவி ஆறு மாதம் கர்ப்பமாக இருந்தபோது வந்தேன். வந்து இரண்டரை மாதங்கள் இங்கு இருந்தேன். அதன் பிறகு நியூசிலாந்து போய் மார்ச் 2022 ல் தான் இந்தியா வந்தேன் என்றால் சரி. அதற்கு காரணம் கொரோணா லாக்டவுன் ஆல் வரமுடியவில்லை. 27.02.2020 ல் குழந்தை பிறந்தது. அந்த குழந்தைக்கு முதல் பிறந்த நாள் விழாவில் எங்கள் குடும்பத்தை சேர்ந்தவர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை என்றால் சரி. ஏனென்றால் அதற்கு முன்பே அவர் என்மீது DVC Case கொடுத்து விட்டார். எனது குழந்தையின் முதல் பிறந்த நாள் 27.02.2021 என்றாலும் DVC வழக்கு போட்டது ஏப்ரல் 2021 என்றால் சரியல்ல. அதற்கு முன்பே போட்டுவிட்டார்கள். DVC வழக்கு போட்டதால் தான் என் குடும்பத்தினர் என் குழந்தையின் முதல் பிறந்த நாள் விழாவில் எங்கள் குடும்பத்தை சேர்ந்தவர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை என்றால் சரி. DVC வழக்கு என்ன ஆனது என்றால் என் மனைவி இறந்து விட்டதால் Dismiss for default ஆகி விட்டது. 10.10.2020 அன்று எனது வீட்டிற்கு இலக்கியா மற்றும் அவரது குடும்பத்தினர் இலக்கியாவின் birth certificate எடுக்க வந்தார்கள் என்றால் அதற்காக வரவில்லை. பிரச்சனை செய்வதற்காக வந்தார்கள். அதனால் எங்கள் குடும்பத்தினர் இலக்கியா மற்றும் அவரது குடும்பத்தினர் மீது கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரி. நானும் எனது குடும்பத்தினரும் ஏற்படுத்திய மனஉளைச்சலால் தான் இலக்கியா தனது அம்மா வீட்டிற்கும் என் வீட்டிற்கும் வந்து போய்கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. நான் இங்கிருக்கும்போது மட்டும்தான் என் வீட்டிற்கு வருவார் மற்றபடி தனது தாய் வீட்டில் தான் இருப்பார். எங்கள் வீட்டிற்கு வர விருப்பம் இல்லை என்று சொல்லிவிட்டார். மார்ச் 2022 ல் இந்தியா வந்தபோது தான் முதன் முதலில் குழந்தையை பார்த்தேன் என்றால் சரி. அதற்கு காரணம் கொரோணா லாக்டவுன். மார்ச் 2022 ல் நான் இந்தியா வந்தபோது சமரசம் பேசி தனிக்குடித்தனம் வைக்க ஏற்பாடு செய்தேன் என்றால் சரி. DVC வழக்கு போட்டதால் தான் நான் தனிக்குடித்தனம் வைக்க ஏற்பாடு செய்தேன் என்றாலும் எனக்கு இலக்கியா மீதோ குழந்தை மீதோ அக்கறை ஏதும் இல்லை என்றால் சரியல்ல. இலக்கியா DVC வழக்கு கொடுப்பதற்கு முன்பே சமாதானம் பேச தான் முயற்சித்தோம். அவர் குழந்தையை எனக்கு வீடியோ காலில் கூட எனக்கு காட்டவில்லை. அதன்பிறகு போலிசார் சொன்னதால் காட்டினார். நான் குழந்தைக்கு தேவையான டிரஸ் எல்லாம் எடுத்து அனுப்பினேன். அவர் நியூசிலாந்து வர மறுத்து விட்டார். அவரது நோக்கம் நான் இந்தியா வந்து விடவேண்டும் அல்லது நியூசிலாந்தில் இருந்து சம்பாதித்து அனுப்ப வேண்டும் என்பது தான். தனிக்குடித்தனம் மூன்றரை மாதங்கள் கள்ளக்குறிச்சியில் இருந்தோம். 09.07.2022 அன்று எனக்கும் இலக்கியாவிற்கு நாங்கள் தனிக்குடித்தனம் இருந்த வீட்டில் பிரச்சனை ஏற்பட்டதால் நானே அவரை பஸ் ஏத்தி அவரது தாய் வீட்டிற்கு அனுப்பி விட்டேன் என்றால் சரியல்ல. நான் சண்டை போட்டு அனுப்பவில்லை. அவர் வாழ மறுத்து போனார். அவர்

ஊருக்கு போனபிறகு 11ம் தேதி அந்த வீட்டை காலி செய்து விட்டேன் என்றால் சரி. அன்றைய தினம் இலக்கியாவிற்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரி. அந்த நோட்டீஸில் என்ன பரிகாரம் கேட்டு அனுப்பினேன் என்றால் அவர் என்னுடன் வாழ மறுத்து விட்டதாலும் குழந்தையுடன் நியூசிலாந்து வர மறுத்து விட்டதாலும் டைவர்ஸ் கேட்டு நோட்டீஸ் அனுப்பினேன். என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்பு நான் இலக்கியாவிற்கு அனுப்பிய அறிவிப்பு என்றால் சரி. அது **எ.ம.சா. 1** ஆகும். அந்த அறிவிப்பை அனுப்பி விட்டு நான் 11.07.2022 ல் வெளிநாட்டிற்கு சென்று விட்டேன் என்றால் சரி. நோட்டீஸ் அவருக்கு 13.07.2022 ல் கிடைத்தது என்றால் சரி. அதன்பிறகு என்ன நடந்தது என்றால் அவர் நோட்டீஸை பார்த்துவிட்டு தற்கொலை செய்து கொண்டார். நான் இலக்கியாவை விவாகரத்து நோட்டீஸ் அனுப்பி புறக்கணித்ததால் தான் அவர் தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரியல்ல. நான் அவருடன் சேர்ந்து வாழத்தான் முயற்சித்தேன். அவர்தான் சேர்ந்து வாழ விரும்பவில்லை. நான் அவருடன் வாழ்ந்த மூன்றரை மாத காலத்தில் தான் அவர் என்ன காரணத்தினால் என்னுடன் நியூசிலாந்து வர மறுத்தார் என்று தெரிந்து கொண்டேன். அந்த காரணங்களை தான் நோட்டீஸில் தெரிவித்தேன். 2022 டிசம்பர் மாதம் இந்தியாவிற்கு வந்தேன். 11.07.2022 அன்று நியூசிலாந்து போன நான் RDO விசாரணைக்காக இந்தியாவிற்கு நான்கு மாதம் கழித்து வந்தேன் என்றால் சரியல்ல. வழக்கு போடுவதற்காக இந்தியா வந்தேன் என்றால் சரியல்ல. வழக்கை தொடர்ந்து நடத்துவதற்காக வந்தேன். அங்கிருந்தே கேஸ் போட்டுவிட்டேன். இலக்கியா இறந்த பின் நான் குழந்தையை பார்க்கவோ வளர்க்கவோ எந்த வித அக்கறையும் எடுத்துக்கொள்ள வில்லை என்றாலும் மாறாக நான் போய் பார்த்ததாகவும் அவர்கள் குழந்தையை பார்க்க அனுமதிக்கவில்லை என்று பொய்யான தகவல் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் என்மீது பொய்வழக்கு போட்டதால் RDO விசாரணைக்கு ஆஜராக வேண்டியிருந்தது. அதன்பிறகு தெரிந்தவர்கள் மூலம் பேசிப்பார்த்தேன். பிறகு DSP யிடம் குழந்தையை பார்க்கவேண்டி மனுக்கொடுத்தேன். குழந்தை தனது தாத்தா பாட்டியிடம் பாதுகாப்பாக உள்ளது என்றால் சரியல்ல. நான் விசாரித்த வரையில் குழந்தையை எதிர் வீட்டில் விட்டு விட்டு போகிறார்கள். 2 ம் எதிர்மனுதாரர் ஆரம்ப அரசு பள்ளியில் தலைமை ஆசிரியராக இருக்கிறார். முதல் எதிர்மனுதாரர் வீட்டில் தான் இருக்கிறார் என்றால் அவர் பள்ளி வாகனத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறார். நான் சொல்வது பொய் என்றாலும் அவர் டிரைவர் வேலையை விட்டு விட்டு குழந்தையை பார்ப்பதற்காக வீட்டிலேயே தான் இருக்கிறார் என்றால் சரியல்ல. நான் மறுமணம் செய்து கொள்ளும் எண்ணத்தில் தான் விவாகரத்துநோட்டீஸ் அனுப்பினேன் என்றால் சரியல்ல. குழந்தையுடனும் மனைவியுடனும் நல்லபடியாக வாழவேண்டும் என்ற எண்ணத்தில் தான் இருந்தேன். அவர் வாழ மறுத்ததால் விவாகரத்து நோட்டீஸ் அனுப்பினேன். அப்போது எனக்கு

மறுமணம் செய்து கொள்ளும் எண்ணம் இல்லை. அப்போது இல்லை என்றாலும் எதிர்காலத்தில் வரலாம் என்றால் சரியல்ல. எனக்கு குழந்தை வேண்டும். எனக்கு வயது 36 தான் ஆகிறது என்றாலும் நான் மறுமணம் செய்து கொள்வேன் என்றாலும் அப்போது குழந்தை என்னிடம் வளர்ந்தால் அது குழந்தைக்கு பாதுகாப்பாக இருக்காது என்றால் சரியல்ல. எனக்கு குழந்தை தான் வேண்டும் குழந்தை வளர்ந்து வந்து அம்மாதான் என்னை விட்டு விட்டு போய்விட்டார். நீங்களும் ஏன் என்னை விட்டீர்கள் என்று கேட்டால் அந்த குற்ற உணர்ச்சி எனக்கு தாங்க முடியாது. இரண்டு வருடங்களாக குழந்தையை பார்க்கவும் விடவில்லை. நான் குழந்தையையும் விட்டு விட்டு வெளிநாடு போய்விடுவேன் என்றாலும் குழந்தை தனது தாத்தா பாட்டியுடன் பாது காப்பாகத்தான் வளர்கிறார்என்றாலும் சரயில்ல. நான் குழந்தையையும் எனது அம்மாவையும் நியூசிலாந்திற்கு கூட்டி போய்விடுவேன். நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியது இல்லை என்றாலும் மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. என் குழந்தைக்காகத்தான் போராடி வருகிறேன். வேலையை விட்டு விட்டேன். குழந்தைக்கு ஐந்து வயதாவற்குள் பள்ளியில் சேர்க்க வேண்டும் அதற்குள் நான் நியூசிலாந்து செல்லவேண்டும்.